பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 10 புதன்கிழமை 24.01.2024 அதிர்வு 177

## 9 நாள்களில் மாத்திரம் 8 பேர் சுட்டுக்கொலை

இலங்கையில் ஜனவரி 15 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரையான 9 நாள்களுக்குள் 8 பேர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு, மட்டக்குளி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ரந்திய உயன தொடர்மாடி 04

### வரியை விதித்து மக்களை நசுக்காமல்

# நாட்டைச் சூறையாடியவர்களை சட்டத்தின் முன் நிறுத்துங்கள்!

### சபையில் அரசிடம் சஜித் வலியுறுத்து

"அரசு திருடர்களைச் சரியாகப் பிடித்திருந்தால் வற் வரியை விதித்து மக்களை நசுக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. எனவே, அரசு வற் வரியை அறவிடாமல் திருடிய திருடர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது வலியுறுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசில் இந்தத் திருடர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, அனைத்து வித தண்டனைகளும் வழங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். 04



# கிளிநொச்சியில் கோர விபத்து ஒருவர் மரணம்; 8 பேர் படுகாயம்

### வீதிக்குக் குறுக்கே நின்ற 8 மாடுகளும் உயிரிழப்பு





(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி – உமையாள்புரம் பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் சிக்கி 8 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



## ஊடக சுதந்திரத்தை அச்சுறுத்தும்

# நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை உடனடியாக மீளப்பெற வேண்டும்

## யாழில் கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் போராட்டம்

**(எஸ்.நிதர்ஷன்)**

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை வாபஸ் பெறுமாறு வலியுறுத்தி கவனயீர்ப்புப் போராட்டம் இன்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு முன்பாக கிறிஸ்தவ மத குருமார்கள் இணைந்து இன்று காலை இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது, ஜனநாயகத்தைச் சிதைக்காதே, நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை மீளப்பெறு, ஜனநாயக உரிமையைப் பறிக்கும் நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை மீளப்பெறு, பேச்சு சுதந்திரத்தை அச்சுறுத்தும் நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை மீளப்பெறு, நாட்டு மக்களை அச்சமூட்டும் நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை மீளப்பெறு, ஊடக சுதந்திரத்தை அச்சுறுத்தும் நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை மீளப்பெறு, சமூக ஊடகங்களை அகற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை மீளப்பெறு உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



















# ஊடக அடக்குமுறைக்கு எதிராக யாழ். நகரில் நாளை போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

ஊடக அடக்குமுறைகள் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் நாளை போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில், யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக நாளை மாலை 4 மணிக்குப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தென்னிலங்கை ஊடக அமைப்புக்களின் பங்கேற்புடன் முன்னெடுக்கப் படவுள்ள இந்தப் போராட்டதில் அனைத்து தரப்பினரையும் அணிதிரளுமாறு யாழ். ஊடக அமையம் கோரியுள்ளது.



# மீனவர்களைக் கடத்தி கொலை செய்த எழுவருக்கு மரண தண்டனைத் தீர்ப்பு

## கொழும்பு மேல் நீதிமன்றம் அதிரடி

மீன்பிடிக் கப்பலைக் கடத்தி மூன்று மீனவர்களைக் கொலை செய்த வழக்கில் 7 மீனவர்களுக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று மரண தண்டனை விதித்துள்ளது.

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் நோக்கில் 2012 ஆம் ஆண்டு இலங்கைக் கடற்பரப்பில் படகொன்றைக் கடத்தி அதிலிருந்த 3 மீனவர்களை கொலை செய்ததுடன் மேலும் சிலருக்குக் காயத்தை ஏற்படுத்தினர் என்று சந்தேகநபர்கள் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு இன்று கொழும்பு உயர் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிபதி 7 மீனவர்களுக்கு மேற்படி மரண தண்டனை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

வழக்கின் 10ஆவது பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருந்த பிரதிவாதியை அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளுக்கு மேலதிகமாக, ஏனைய ஆறு குற்றச்சாட்டுகளுக்கும் பிரதிவாதிகளுக்கு 29 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்த நீதிபதி, தலா 20 இலட்சத்து 8 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

மரண தண்டனைக்கு மேலதிகமாக விதிக்கப்பட்ட சிறைத்தண்டனைகளையும் ஒரே நேரத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

11 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

மூன்று பிரதிவாதிகள் வழக்கு விசாரணை இடம்பெற்றிருந்த காலப்பகுதியில் இறந்துவிட்டதால், 8 பிரதிவாதிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் நடத்தப்பட்டு அவர்களில் 7 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**திருடிய சகல...**

எரிவாயு, சீனி, நானோ நைட்ரஜன், நிலக்கரி மற்றும் மல உர ஊழல்கள் தொடர்பில் இதுவரை எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் நிலையியல் கட்டளை 27 (2) இன் கீழ் அரசிடம் கேள்வி எழுப்பும்போதே எதிர்க் கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டை பொருளாதார ரீதியாக வங்குரோத்தாக்கி,நாட்டு மக்களை மிகவும் நிர்க்கதியான எதிர்காலத்திற்கு ஆளாக்கிய தரப்பினர் யார் என்பதனை உயர் நீதிமன்றத்தின் சமீபத்திய தீர்ப்பின் ஊடக வெளிக்கொணரப்பட்டது. இவ்வாறு வெளிக்கொணரப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, அஜித் நிவாட் கப்ரால், எஸ். ஆர்.ஆடிகல, பி.பி. ஜயசுந்தர, டபிள்யூ. டி.லக்ஷ்மன் மற்றும் சமந்தா குமாரசிங்க போன்றவர்களைத் தவிர பொறுப்புக் கூற வேண்டிய மேலும் பலர் இந்த அரசில் உள்ளனர். இந்த ஊழல் மற்றும் மோசடி நடவடிக்கைகளுக்குக் காரணமானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என வரிச்சுமைக்கு ஆளான மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எரிவாயு, சீனி, நானோ நைட்ரஜன், நிலக்கரி, மல உரம் போன்றவற்றுக்கு எதிரான விசாரணைகள் தாமதமாக இடம்பெற்றாலும், நுண், சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கு பரேட் சட்டத்தை அமுல்படுத்தி அவர்களின் சொத்துக்கள் ஏலம் விடப்பட்டு வருகின்றது.

2019 - 2022 ஆம் ஆண்டில் நிகழ்ந்த பல முறைகேடுகள் தொடர்பான விசேட கணக்காய்வு விசாரணைகள் தொடர்பான பல சிக்கல்கள் உள்ளன."

– என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இது தொடர்பில் தனித்தனியாக கேள்விகளையும் எழுப்பினார்.

**9 நாள்களில்...**

குடியிருப்புக்கு அருகில் ஜனவரி 15 ஆம் திகதி இரவு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. ஓட்டோவில் இருந்த இருவரே துப்பாக்கிச்சூடு நடத்தி விட்டுத் தப்பிச் சென்றனர்.

'படா ரஞ்சி' என அழைக்கப்படும் செந்தில் ஆறுமுகன் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். இது பாதாள குழுக்களுக்கிடையிலான மோதலாகக் கருதப்படுகின்றது.

சுட்டுக்கொல்லப்பட்டவர் இந்தியாவில் தலைமறைவாகியுள்ளார் எனக் கூறப்படும் பாதாளக் குழு உறுப்பினர் பூகுடு கண்ணாவின் உதவியாளராகச் செயற்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

ஜனவரி 20 ஆம் திகதி மாத்தறையில் 24 வயது இளைஞர் ஒருவர், அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

அதேவேளை, ஜனவரி 22 ஆம் திகதி அபே ஜனபலவேகய கட்சியின் தலைவர் உட்பட ஐவர் பெலியத்தயில் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதுவும் பாதாளக் குழு மோதலாகக் கருதப்படுகின்றது.

கம்பஹா, கஹடான கணாராம விகாரையில் நேற்று நண்பகல் பௌத்த தேரர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். காணிப் பிரச்சினையொன்றை அடிப்படையாகக்கொண்டு இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

மேற்படி துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கிளிநொச்சியில்...**

அத்துடன், இந்த விபத்தில் சிக்கி 8 மாடுகளும் உயிரிழந்துள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த வான் ஒன்றும் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வீதிக்குக் குறுக்கே நின்ற மாடுகளே விபத்துக்குக் காரணம் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்தில் வவுனியாவைச் சேர்ந்த திருமணி திருச்செல்வம் (வயது 50) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.









# வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனின் மேற்பார்வையின் கீழ் 300 கிலோ கஞ்சா இன்று எரிப்பு

(கி.வசந்தரூபன்)

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் மேற்பார்வையின் கீழ் இன்று 300 கிலோவுக்கும் மேற்பட்ட கஞ்சா எரிக்கப்பட்டது.

கடந்த வருடம் வவுனியா மேல் நீதிமன்றத்தில் முடிவுறுத்தப்பட்ட 12 வழக்குகளில் முன்வைக்கப்பட்ட 300 கிலோவுக்கு மேற்பட்ட கஞ்சா வவுனியா ஏ – 9 வீதி சாந்தசோலை பகுதியில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் மேற்பார்வையின் கீழ் நீதிமன்ற உத்தியோகத்தர்கள், நீதிமன்றப் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் எரிக்கப்பட்டது.

சுகாதார நிலைமைகளைக் கருத்தில் கொண்டு மக்கள் நடமாட்டம் மற்றும் அருகே வீடுகள் அற்ற பகுதியில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கஞ்சா எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பிரபாகரனின் தீர்க்கதரிசனம்

''இலங்கை இறைமையுள்ள நாடு. அதற்கு சில விடயங்களை நாம் வலியுறுத்திச் சொல்ல முடியும். அதைச் சொல்லுகின்றோம். அதற்கு மேல் நாம் ஒன்றும் செய்ய முடியாது'' - இவ்வாறு ஈழத் தமிழர்களைப் பார்த்துதன்இயலாமையை வெளிப்படுத்திக் கைவிரித்துக் கூறிவிட்டது பாரதம்.

கொழும்பில் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்த இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா இந்த விடயத்தை நேரடியாக - வெளிப்படையாக - தெரிவித்து விட்டார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம், அதன் கீழ் கொண்டுவரப்பட்ட 13 ஆவது அரசமைப்புத் திருத்தம், அந்த 13ஆம் திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபை எல்லாம் இனிக் கேள்விக்குறிதான். அவற்றை நடைமுறையாக்கம் செய்யும்படி அவ்வப்போது அறிக்கை மூலமும், மூடிய அறைக்குள்ளான ராஜதந்திர சந்திப்புக்களின் போதும் புதுடில்லி வலியுறுத்தும். அவ்வளவுதான். அதற்கு மேல் இந்தியாவுக்கு எதுவும் செய்ய முடியாது. இந்தியாவின் வல்லமை அவ்வளவுதான்.

இலங்கை இறைமையுள்ள நாடு, அதன் மீது வெறும் அழுத்தம் அல்லது வார்த்தைகள் மூலமான வற்புறுத்தல் மட்டுமே தன்னால் செய்ய முடியும் என்றால், தமது உரிமைகளுக்காக ஆயுதமேந்திப் போராடிக் கொண்டிருந்த தமிழ்த் தரப்புகளை அந்த ஆயுதங்களைக் கைவிட்டு, அஹிம்சை அரசியலுக்கு திரும்புங்கள், நாங்கள் உரியதைப் பெற்று தருகிறோம் என்று பாரதம் வற்புறுத்தி, ஆயுதக் களைவு செய்தது எதற்காக? இப்படி ஈழத் தமிழர்களை நட்டாற்றில் கைவிட்டு, தன் கையை பாரதம் விரித்துக் கொள்வதற்காகவா?

இதில் அதிகம் வேடிக்கை என்னவென்றால் அப்படி இந்தியாவை நம்பி, ஆயுதங்களைக் கையளித்து, இந்தியாவிடம் சரணாகதி அரசியலை நடத்திய முன்னாள் தமிழ் ஆயுதக் குழுக்களின் தலைவர்களை அழைத்துத்தான் இப்படித் தன் இயலாமையைக் கை விரித்துக் கூறி இருக்கின்றது இந்தியா.

இந்த விடயத்தில் முதலில் மூக்குடைபட்டவர்கள் ஈழத் தமிழர்கள் அல்லர். இந்திய உபகண்டம்தான். பாரத தேசம்தான்.

இவ்விடயத்தை ஒட்டிய இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஆரவாரமாக பெருத்த எடுப்பில் பாரத தேசம் மேற்கொண்ட போதே - 36 வருடங்களுக்கு முன்னரே - நிலைமை இப்படித்தானாகும் என்பதை தீர்க்கதரிசனத்துடன் விடுதலைப் புலிகள் கூறியிருந்தமைதான் இதில் முக்கிய அம்சமாகும்.

''இலங்கை - இந்திய ஒப்பந்தத்தால் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என நான் நினைக்கவில்லை. சிங்கள இனவாதப் பூதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கிவிடும் காலம் தூரத்தில் இல்லை.'' - இப்படி 1987 ஒகஸ்டில் - 36 ஆண்டுகளுக்கு முன்னர் - தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தமது வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சுதுமலை உரையில் தெட்டத் தெளிவாக எதிர்வு கூறி இருந்தார். அதுவே இப்போது நடந்து கொண்டிருக்கின்றது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம், அதன் பிரகாரம் அமைந்த 13 ஆவது அரசமைப்புத் திருத்தம், அதற்குக் கீழ் கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமை ஆகியவை தொடர்பில் இலங்கை அரசுக்கு வெறும் வாய் மூல அழுத்தத்தைத்தான் நாம் கொடுக்க முடியும், அதற்கு அப்பால் எங்களால் எதுவும் செய்ய முடியாது என்று இந்தியா இப்போது கையை விரிப்பது பிரபாகரனின் சுதுமலைப் பேச்சின் தீர்க்கதரிசனத்தை அம்பலப்படுத்தும் விடயமாகும்.

தன்னால் இலங்கையைக் கொண்டு நடைமுறைப்படுத்தச் செய்ய இயலாத மாகாண சபை முறைமையைக் காட்டித்தான் - அந்த மாயமானை முன்னிறுத்தித்தான் - அதை ஏற்கும்படி வலியுறுத்தித்தான் - இலங்கை தமிழரின் தாயகப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்தது இந்தியா. தமிழர் தேசத்தின் மீது பெரும் போரை அது மேற்கொண்டது. தமிழ்ப் போராளிகள் குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து, அரசியல் களத்துக்கு அனுப்பும் செயற்பாட்டை இந்தியா வல்வந்தமாகச் செய்தமை கூட இப்போது அது கைவிரிக்கும் மாகாண சபை முறையை நம்பிக்கை நட்சத்திரமாகத் தமிழ் இயக்கத் தலைவர்களுக்குப் படம் காட்டித்தான் என்பதை நாம் மறந்து விட முடியாது.

இப்படி இந்தியா கைவிரித்த பின்னரும் - கைவிட்ட பின்னரும் - அந்த நாட்டை நம்பி, தங்கள் போராளிகளின் அளப்பரிய தியாகத்தின் மீது கட்டப்பட்ட விடுதலைப் போராட்டத்தைக் கைவிட்டு, ஆயுதங்களை பாரதத்திடம் கையளித்து, இப்போது நடுவீதியில் ஏமாந்து நிற்கும் முன்னாள் தமிழ்ப் போராளிகள் இவ்வளவு ஏமாற்றலுக்குப் பிறகும் அதன் வெஞ்சினத்தை - வெப்பியாரத்தை - வெளிப்படுத்தி இந்தியாவினுடைய உண்மை முகத்தை - அதன் ஏமாற்று வேலையை - அம்பலப்படுத்தாமல் மௌனம் பேணுவதுதான் தமிழ் மக்களின் பெரும் துரதிஷ்டமாகும்.



# நல்லூரானின் புதிர் அறுவடை

(எஸ்.நிதர்ஷன்)

நல்லூர் கந்தன் ஆலயத்தில் நெற்புதிர் அறுவடை நிகழ்வு இன்று காலை இடம்பெற்றது.

தைப்பூச தினத்துக்கு முதல் நாள் கொண்டாடப்படும் ‘புதிர் தினம்’ எனும் பாரம்பரிய நிகழ்வில் கோவில் அறங்காவலரும், சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்ய ஆலயத்துக்கு சொந்தமான மறவன் புலவில் உள்ள வயலுக்கு செல்வார்கள்.

அந்த வயலில் பூஜை வழிபாட்டுடன் அறுவடை செய்யும் நெல்லில் இருந்து அமுது தயாரித்து கந்தசுவாமிக்கு படையல் செய்து பூசைகள் செய்வது வழக்கம்.

அவ்வாறே இம்முறையும் இடம்பெற்ற படையல் பூஜைகளை தொடர்ந்து பக்தர்களுக்கும் அமுது வழங்கப்பட்டது.

இந்த வழிபாட்டு முறை அக்கோயிலின் மரபாக பண்பாட்டு விழாவாக பேணப்பட்டு வருகிறது. இந்த புதிர் விழா 290 ஆவது ஆண்டாக இந்த வருடம் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.








# 2025 ஆம் ஆண்டுக்குள் பரீட்சைகளை முறையாக நடத்துவதற்கு நடவடிக்கை

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சபையில் தெரிவிப்பு



2025 ஆம் ஆண்டுக்குள் பரீட்சைகளை முறையாக நடத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், உயர்தரப் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி நிறைவடையவுள்ள நிலையில், விடைத்தாள்களை திருத்தம் செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வருட உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்தம் செய்யும் ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு கடந்த வருடம் வழங்கப்பட்ட கொடுப்பனவுகளை வழங்குமாறு அமைச்சுப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கான பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# போதைப்பொருள்களுடன் ரக்பி பயிற்றுவிப்பாளர் கைது



கண்டி, அம்பதென்ன பகுதியில் போதைப் பொருள்களுடன் பாடசாலை ரக்பி பயிற்றுவிப்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சந்தேக நபரிடம் இருந்து 4,100 போதை மாத்திரைகளும், 02 கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள் ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

22 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என தெரி விக்கப்பட்டுள்ளது.

# பெப்ரவரி மாத நடுப்பகுதியில் மின்சார கட்டண திருத்தம்

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தகவல்

இந்த ஆண்டுக்கான மின்சார கட்டண திருத்தம் எதிர்வரும் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் மேற்கொள்ளப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேரா சிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரி வித்துள்ளார்.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு யில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணத்தை திருத்திய மைப்பதில் ஒரு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இதனால் மின்சார வாரியம் முன்வைத்த முன்மொழிவு தொடர்பான பொதுமக்களுக்கான கலந்தாய்வு இன்று ஆரம்பிக்கப் பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.





# மன்னாரில் பிரமாண்ட பொங்கல் விழா

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் இந்து அமைப்புக்களின் ஏற்பாட்டில் 2024 ஆம் ஆண் டுக்கான பிரமாண்ட பொங்கல் விழா நேற்று ஈச்சலவாக்கை மீனாட்சி அம்மன் ஆலய வளகத்தில் மிகவும் சிறப்பாக நடை பெற்றது.

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள ஈச்சளவாக்கை அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலய நிர்வாகத்தினரின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அர சாங்க அதிபர் கே. கனகேஸ்வரன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறீஸ் கந்தகுமார் கலந்துகொண்டார்.

அத்துடன், மறவன்புலவு சச்சிதானதன், அடம்பன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பிரதேச செயலாளர்கள், நூற்றுக்கணக் கான இளைஞர், யுவதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஈச்சளவாக்கை பாட சாலையில் இருந்து விருந்தினர்கள் தமிழ் பாரம் பரிய மேல தாள வாத்தியங்களுடன் வர வேற்கப்பட்டு 108 பானைகளில் பாரம் பரிய முறைப்படி பொங்கல் பொங்கி நிகழ்வு ஆரம்பமானது.

அதனை தொடர்ந்து மன்னார் மாவட்ட செயலக கலாச்சார உத்தியோகஸ்தர்களின் பங்குபற்றலுடன் 150 பேர் இணைந்து பாரம் பரிய நடனம் ஒன்றை அரங்கேற்றினர். பல்வேறு கலை நிகழ்வுகள், போட்டி விளையாட்டுக்கள் என்பனவும் இடம்பெற்றன .

அதே நேரம் பொங்கல் விழாவிற்கு வருகை தந்த அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.











# செவிப்புலனற்றோர் சங்கத்தினால் சைகை மொழி விழிப்புணர்வு செயல்திட்டம்

(எஸ்.அஷ்ரப்கான்)

கேள்திறன் அற்றவர்கள் தேவையைப் பெறுவதற்கு எதுவாக அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு சார்ந்த சைகை மொழி விளக்கத்தினை காட்சிப்படுத்தும் நடவடிக்கையினை அம்பாறை மாவட்ட செவிப்புலனற்றோர் இளைஞர் சங்கத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் இன்று இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பிரதேச செயலாளர் எஸ்.எல் முகம்மது ஹனிபாவிடம் மேற்படி சைகை மொழி விளக்கம் கொண்ட செயலாற்றுகை விநியோகிக்கப்பட்டது.

# தேசிய அடையாள அட்டை இலக்கத்தை ரி.ஐ.என். இலக்கமாக மாற்றுவதற்கு நடவடிக்கை

ஒருவரது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை ரி.ஐ.என். எனப்படும் வரி செலுத்துவோர் அடையாள இலக்கமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இராஜாங்க நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

வழமையான வரி செலுத்துவோர் அடையாள இலக்கம் பெற்றுக் கொள்ளும் முறைமை நடைமுறையில் உள்ளது.

இந்தநிலையில், மேற்படி வரி செலுத்துவோர் இலக்கத்தை பொதுமக்களுக்கு இலகுவாக வழங்குவது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளருடனான இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.




# தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க அலுவலக சட்டமூலத்திற்கு சபாநாயகர் அனுமதி

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலக சட்டமூலத்திற்கு தாம் அங்கீகாரம் வழங்கியுள்ளேன் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எனவே, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலக சட்டமூலம் இன்று முதல் சட்டமாக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அலுவலகத்தினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மாநாடு

கிழக்குப் பல்கலைக்கழக பல்துறை ஆராய்ச்சிக்கான நிலையம், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் மற்றும் இந்தியாவின் ஈ.எஸ்.என் பதிப்பகம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த ‘நாளைய சவால்களுக்கான நிலைத்திருக்கும் தன்மை, புத்தாக்கம், இடைநிலை ஆராய்ச்சி, என்ற தலைப்பிலான சர்வதேச மாநாடு இடம்பெற்றுள்ளது. கிழக்குப் பல்கலைக்கழக நல்லையா மண்டபத்தில் இந்த மாநாடு நடை பெற்றது.



கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் ஏ.ஜி.ஜோன்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தேசிய விஞ்ஞான மன்றத்தின் தலைவரும் றுகுணு பல்கலைக்கழக பயிர் விஞ்ஞானத் துறையைச் சேர்ந்த வாழ்நாள் பேராசியருமான ரஞ்சித் சேனாரத்ன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டுள்ளார்.

இந்தியாவின் ஈ.எஸ்.என் பதிப்பகத்தின் நிறுவுனரும் அதன் தவிசாளருமான கலாநிதி ஜே.பானுசந்தர், மட்டக்களப்பு அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளருமான திருமதி. ஜே.ஜே.முரளிதரன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

அத்துடன், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் ஆரம்ப உரையை நிகழ்த்தினார்.

நிகழ்வின் பங்காளரான தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் நாகா சுப்ரமணியும் சிறப்புரையாற்றினார்.







# மாற்றுத் திறனாளிகளுக்கு தொழில் வழங்கும் விசேட திட்டம் மட்டக்களப்பில் முன்னெடுப்பு

(பழுவூரான்)

ஜப்பான் சர்வதேச முகவாண்மை யகம், சமூக சேவை திணைக்களம், மனித வலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களம் ஆகியவை இணைந்து மாற்றுத் திறனாளிகளுக்கு தொழில் வழங்கும் விசேட திட்டமொன்றை கடந்த 2022 ஆம் ஆண்டிலிருந்து முன்னெடுத்து வருகின்றன.

இந்த திட்டத்தின் மற்றுமொரு கட்டம் இன்று கல்லடி தனியார் விடுதியில் இடம்பெற்றது.

ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முக வாண்மையகத்தின் திட்டப் பணிப்பாளர் சிமிசு தகாசி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் கலந்து கொண்டார்.

பிரதம அதிதி உள்ளிட்ட அதிதிகள் வரவேற்கப்பட்டதனைத் தொடர்ந்து, மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.





11 தொழில் வழங்குனர்களினால் நேர்முகத் தேர்வுகள் மேற்கொள்ளப்பட்டு மாற்றுத் திறனாளிகளுக்கான வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுக் கப்பட்டன.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர்கள், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி.சந்திரகலா கோணேஸ்வரன், மனித வலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் வி.மைக்கல் கொலின், சமூக சேவை திணைக் களத்தின் ஈ.எஸ்.பி.டி. திட்டத்தின் இணைப்பாளர் லக்ஷா தீ மற்றும் ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முக வாண்மை திட்டத்துடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள், சமூக சேவை திணைக்களத்தின் உத்தியோகத்தர் கள், மனிதவலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களத்தின் உத்தி யோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.








# மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பொங்கல் விழா

(பழுவூரான்)

மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலகம் நடத்திய பொங்கல் விழா பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் தலைமையில் நேற்று இடம்பெற்றது .

உதவிப் பிரதேச செயலாளர்களான திருமதி லக்ஷனியா பிரசாந்தன் , மற்றும் சியாவுல் ஹக் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர் .

இந்த நிகழ்வில் பிரதேச செயலகத்தின் கீழ் செயற்படும் ஒன்பது கிளைக்குமென தனித்தனி பொங்கல் பானைகள் வைக்கப்பட்டு அக்கிளைகளில் பணி புரியும் உத்தியோகத்தவர்களால் பொங்கல் பொங்கி படைக்கப்பட்டது.

பொங்கல் விழாவின் போது நடனம், பாடல் உள்ளிட்ட நிகழ்வுகளும், கலாசாரப் பிரிவினரால் நடத்தப்பட்டன.

இதன்போது செயலகத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.














# பெலியத்தயில் ஐவர் சுட்டுக்கொலை: சந்தேக நபரொருவர் கைது

மாத்தறை – பெலியத்தை பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

54 வயதுடைய சமன் குமார என்ப வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பெலியத்தை – கஹவத்த வெளியேறும் பகுதிக்கு அருகில், கடந்த 22 ஆம் திகதி இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது.

இதேவேளை, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பெலியத்த – கஹ வத்தை வெளியேறும் பகுதிக்கு அருகில் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டு 5 பேர் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர் புடைய சந்தேகநபர்கள் பயணித்த ஜீப் ரக வாகனம் சென்ற வீதிகளை பொலி ஸார் தற்போது அடையாளம் கண் டுள்ளனர்.

தாக்குதலை நடத்திய பின்னர் சந்தேகநபர்கள், பெலியத்த, ஹக்மன, கம்புருபிட்டிய மற்றும் அக்குரஸ்ஸ ஊடாக பயணித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

அக்குரஸ்ஸ – பங்கம பகுதியிலும் யக்கலமுல்ல பகுதியிலும் அவர்கள் சுற்றித்திரிந்துள்ளனர் எனவும் தெரிவிக் கப்படுகின்றது.

துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் ஈடு பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படு கிறது.

அவர்களில் ஒருவர் கம்புருப்பிட்டி பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு அருகில் ஜீப்பில் இருந்து இறங்கும் சி.சி.டி.வி. காணொளி காட்சி கள் கிடைத்துள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சந்தேக நபர் தமது முதுகில் ஒரு பையை சுமந்து சென்றுள்ளார். அவர் பயணித்த இடங்கள் தொடர்பான தகவல்களும் வெளியாகியுள்ள காணொளி காட்சிகளின் ஊடாக தெரிய வந்துள்ளது.

அத்துடன் ஜீப் ரக வாகனத்தில் இருந்து வெளியே வந்த இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் எனவும் ஒரே நேரத்தில் 2 தோட்டாக்கள் வெளியேறும் வகையில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகவும் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றில் 27 மனுக்கள் தாக்கல்

அரசாங்கத்தினால் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக இதுவரையில் உயர்நீதிமன்றில் 27 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள் ளன.

இந்த சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானவை என உத்தரவிடுமாறு கோரி இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், மேற்படி சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டுமாயின் நாடாளு மன்றில் மூன்றில் இரண்டு பெரும் பான்மை வாக்கும், பொது வாக்கெடுப்பும் அவசியமென உத்தரவிடுமாறும் கோரப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் நிஷ ாம் காரியப்பர் உள்ளிட்ட தரப்பினர் இந்த மனுக்களை தாக்கல் செய்துள் ளனர்.



இந்த மனுக்களின் பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு அமைய, இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் கரையோர பாதுகாப்பு படையி னர் உள்ளிட்டோரால் எந்தவொரு நபரையும் உரிய காரணங்கள் இன்றி கைது செய்து தடுத்து வைக்க முடியும் என மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ள னர்.

# இராமேஸ்வரம் மீனவர்கள் 6 பேரை உடனடியாக மீட்க நடவடிக்கை தேவை

## மத்திய அரசுக்கு அன்புமணி வலியுறுத்தல்

வங்கக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற இராமேஸ்வரம் மீனவர்கள் 6 பேரை இலங்கைக் கடற்படை கைது செய்திருக்கிறது. அவர்களின் இரு படகுகளையும் சிங்களப் படையினர் பறிமுதல் செய்திருக்கின்றனர். உடனடியாக அவர்களை மீட்க நடவடிக்கை வேண்டும் என பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் இது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,



“வங்கக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற இராமேஸ்வரம் மீனவர்கள் 6 பேரை இலங்கைக் கடற்படை கைது செய்திருக்கிறது. அவர்களின் இரு படகுகளையும் சிங்களப் படையினர் பறிமுதல் செய்திருக்கின்றனர். தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக மீன்பிடிக்கும் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது சிங்களப் படையினர் அத்துமீறி கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் மொத்தம் 40 தமிழக மீனவர்கள் சிங்களக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்திய அரசின் வலியுறுத்தலை ஏற்று அவர்களை விடுதலை செய்ய இலங்கை அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. அதற்கான ஆணை கூட இன்னும் பிறப்பிக்கப்படாத நிலையில் அடுத்தக்கட்டமாக மேலும் 6 மீனவர்களை இலங்கைப் படைகள் கைது செய்துள்ளன.

தமிழக மீனவர்கள் சிங்களக் கடற்படையினரால் கைது செய்யப்படுவது தொடர் நிகழ்வாகி விட்டன. இலங்கைப் படையினரின் தொடர் அத்துமீறல்கள் காரணமாக தமிழக மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர். இலங்கைப் படையினரின் இந்த அத்துமீறலுக்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கைது செய்யப்பட்ட 8 மீனவர்களையும் அவர்களின் படகுகளுடன் மீட்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்” எனத் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் கூட்டணி குறித்து விரைவில் அறிவிப்பு: மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் தகவல்

மக்களவைத் தேர்தலில் கூட்டணி குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல் ஹாசன் தெரிவித்துள்ளார்.

மக்கள் நீதி மய்யம் கட்சியில் மாவட்ட செயலாளர்களை நியமிக்கும் பணி இடம்பெற்று வருகிறது. இதைத் தொடர்ந்து மக்களவைத் தேர்தல் நெருங்கி வருவதால், தேர்தல் பணிகளில் அந்தக் கட்சியினர் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதையொட்டி, அவசர செயற்குழு, பொதுக் குழு கூட்டத்துக்கு மக்கள் நீதி மய்யம் சார்பில் நிர்வாகிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் புதுச்சேரி மாநில செயற்குழு கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கூட்டத்துக்கு ம.நீ.ம. தலைவர் கமல் ஹாசன் தலைமை தாங்கினார்.துணைத் தலைவர் தங்க வேலு, புதுச்சேரி மாநில பொது செயலாளர் சந்திர மோகன், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மக்களவை தேர்தல், அடுத்து வரும் சட்டப்பேரவை தேர்தல்களை எப்படி அணுக வேண்டும் என்பது குறித்தும், மக்களவைத் தேர்தல் கூட்டணி, கட்சி வளர்ச்சி குறித்தும் நிர்வாகிகளுக்கு கமல்ஹாசன் ஆலோசனை வழங்கினார்.

அப்போது, தேர்தல் கூட்டணி குறித்து பல்வேறு கட்சிகள் பேசி வருவதாகவும், கூட்டணி குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை என்றும் நிர்வாகிகளிடம் கமல் ஹாசன் தெரிவித்துள்ளார்.

மேலும், கூட்டணி, கட்சி போட்டியிடும் தொகுதிகள் குறித்து விரைவில் அறிவிக்கப்படும் எனவும் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழக மநீம செயற்குழு கூட்டம் ஆழ்வார்பேட்டை கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

# கட்டி முடிக்கப்படாத கோயிலை அவசரமாக திறந்தது பா.ஜ.கவின் தேர்தல் தந்திரம்: ஸ்டாலின் விமர்சனம்

“தேர்தலைச் சந்திக்க இருக்கும் பா.ஜ.கவுக்கு மக்களிடம் சொல்வதற்குச் சாதனை என்று எதுவும் இல்லை. அதனால்தான் முழுவதுமாக கட்டி முடிக்கப்படாத கோயிலை, அவசர அவசரமாகத் திறந்து, எதையோ சாதித்து விட்டதாகக் காட்ட நினைக்கிறார்கள். இதுமாதிரியான திசை திருப்பும் தந்திரங்களுக்கு மக்கள் சரியான பாடம் கொடுப்பார்கள்.”

– இவ்வாறு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார். அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவை குறிப்பிடாமல் இந்தக் கருத்தை முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று நடைபெற்ற தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலுவின் நூல் வெளியீட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் அவர் உரையாற்றுகையில்,

“ கடந்த பத்தாண்டுகாலமாக, மக்களுக்குக் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாமல், தமிழகத்துக்கும், தமிழக மக்களுக்கும் எதையும் செய்யாமல், பேரிடர் பாதிப்புக்குக் கூட நிதி ஒதுக்காமல் இறுதிக் காலத்தில் ஒரு கோயிலைக் காட்டி, மக்களைத் திசை திருப்பப் பார்க்கிறது பா.ஜ.க. தலைமை.

தேர்தலைச் சந்திக்க இருக்கும் பா.ஜ.கவுக்கு மக்களிடம் சொல்வதற்குச் சாதனை என்று எதுவும் இல்லை. அதனால்தான் முழுவதுமாக கட்டி முடிக்கப்படாத கோயிலை, அவசர அவசரமாகத் திறந்து, எதையோ சாதித்து விட்டதாகக் காட்ட நினைக்கிறார்கள். இதுமாதிரியான திசை திருப்பும் தந்திரங்களுக்கு மக்கள் சரியான பாடம் கொடுப்பார்கள். இது உறுதி.

எல்லா வகையிலும் மக்களை நசுக்கிய ஆட்சி, பா.ஜ.க. ஆட்சி. அந்தக் கோபம் மக்கள் மனதில் இருக்கிறது. தமிழ்நாட்டில் நாம் வலுவான கூட்டணியை அமைத்திருப்பது போன்று, இந்தியா முழுமைக்கும் வலுவான கூட்டணியை உறுதி செய்தாக வேண்டும்.” – என்றார்.

# சர்வதேச மாணவர்கள் விசாக்களுக்கு 2 வருட வரம்பை அறிவித்தது கனடா

கனடாவுக்கு கல்வி பயில வரும் மாணவர்களுக்கு வழங்கப்படும் விசா காலம் இரண்டு வருடங்களாக கனடா அரசு வரம்பு நிர்ணயித்துள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய குடியேற்றத்துறை அமைச்சர் மார்க் மில்லர்,




"கனடாவுக்கு கல்வி பயில வரும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த 2022 ஆம் ஆண்டு 8 லட்சத்துக்கும் மேற்பட்ட கல்வி விசாக்கள் வழங்கப்பட்டன.

2023 ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 5.60 லட்சம் மாணவர் விசாக்கள் வழங்கப்பட்டன. 10 ஆண்டுகளுக்கு முன் நாங்கள் ஏற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையைவிட இது மூன்று மடங்கு அதிகம்.

எனவே, கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில், நடப்பாண்டில் 35 சதவீதம் அளவுக்கு மாணவர் விசாக்களை குறைக்க முடிவெடுத்துள்ளோம். இதன் மூலம், நடப்பாண்டில் 3.64 லட்சம் மாணவர் விசாக்கள் மட்டுமே வழங்கப்படும். இந்த வரம்பு இரண்டு ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும்.

இந்த ஆண்டின் இறுதியில் மறுமதிப்பீடு செய்யப்பட்டு, மாணவர் விசாக்களின் அதிகபட்ச எண்ணிக்கை எவ்வளவு இருக்க வேண்டும் என்பது குறித்த அறிவிப்பு அடுத்த ஆண்டு வெளியிடப்படும். கனடாவில் தங்குவதற்கு வீடுகள் கிடைப்பதில் மாணவர்கள் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். கனடா வரும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்வதே இந்த பிரச்சினைக்குக் காரணம். இதைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது" என தெரிவித்துள்ளார்.

# கனடா பிரதமருக்கு கொலை அச்சுறுத்தல்!




கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ருடோ மற்றும் கியூபெக் மாகாய முதல்வர் பிரான்சுவா லெகால்ட் இருவருக்கும் கொலை அச்சுறுத்தல் விடுத்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மீதான வழக்கு விசாரணையில் தான் கொலை அச்சுறுத்தல் விடுத்ததை அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

மேற்படி இருவருக்கும் கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக 30 வயதான ஜெர்மெய்ன் லீமெய் என்ற நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டு உள்ளிட்ட ஐந்து குற்றச்சாட்டுக்கள் லீமெய் மீது சுமத்தப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கைதிகளை விடுதலை செய்வதற்கான ஒப்பந்தத்தை முன்வைக்கவுள்ள இஸ்ரேல்

போரை முடிவுக்கு கொண்டு வராமல் சிறைபிடிக்கப்பட்ட கைதிகளை விடுதலை செய்வதற்கான ஒப்பந்தத்தை இஸ்ரேல் முன்வைக்க உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி ஹமாஸ் உள்ளிட்ட குழுக்களால் சிறைபிடிக்கப்பட்டவர்களை விடுவிப்பதை நோக்கமாகக் கொண்ட இரண்டு மாத போர்நிறுத்தத்திற்கான முன்மொழிவை இஸ்ரேல் தயார் செய்துள்ளதாக கூறப்படுகிறது.



போருக்கு மத்தியில் சிறைபிடிக்கப்பட்டவர்களை மீட்பதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்ள இஸ்ரேலிய அரசாங்கம் மீது அழுத்தம் அதிகரித்துவரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மேலும் கட்டார் மற்றும் எகிப்திய மத்தியஸ்தர்கள் மூலம் இந்த திட்டம் ஹமாஸிடம் முன்வைக்கப்பட்டதாக இஸ்ரேலிய அதிகாரிகளை மேற்கோள் காட்டி அமெரிக்க இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இரண்டு மாத போர் நிறுத்தமும் இதில் அடங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஜப்பான் ஜெயிக்கா திட்டத்தின் கீழ் மகளிர் சங்கங்களை வலுப்படுத்தும் பயிற்சி

(எம்.எப்.நவாஸ்)

ஜப்பானின் ஜெய்க்கா திட்டத்துடன் இணைந்து சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் மூலம் பதிவு செய்யப்பட்ட மகளிர் சங்கங்களை வலுப் படுத்துவதற்கான பயிற்சி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் இரண்டு ஆண்டு திட்டத்தின் கீழ் நடைமுறைப் படுத்தப்படும் திட்டம் தொடர்பாக இன்று அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் தெளிவுபடுத்தும் நிகழ்வு இடம் பெற்றது.

உதவி பிரதேச செயலாளர் திருமதி நஹீஜா முசாபிர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஜெய்க்கா திட்டத்தின் பால் நிலை சமத்துவ நிபுணர் ஜெஸாக்கோ நகசிமா, சிறுவர் மகளிர் விவகார அமைச்சின் திட்ட உத்தியோகத்தர் பிரசன்னா, அட்டாளைச்சேனை மகளிர் அபிவிருத்திக்கான உளவளத் துணை உதவியாளர் ஹப்றத் உதவியாளர் பர்ஹானா, அக்கரைப்பற்று மகளிர் அபிவிருத்தி கள உதவியாளர் றாசிதா, சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவியாளர் கஸ்பியா பீவி, கலாச்சார உத்தியோகத்தர் ஜஃபர் உட்பட சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



